**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 312/2022**
**வழக்கு சாட்சி – அ.சா. 4 (பட்டியல் சாட்சி –5 ).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ஜெகதீசன். | ஜாதி | |
| தந்தை பெயர் | ஜெயராஜ். | தொழில் | விவசாயம் |
| கிராமம் | பாலார்பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 31/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.07.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, பாலார்பட்டியில் குடியிருந்துகொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது உறவினர் ஆவார். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் எனது பக்கத்து ஊரைச் சேர்ந்தவர். கடந்த 10.01.2021 ஆம் தேதியன்று, இரவு 07.00 மணி அல்லது 07.30 மணி அளவில் நான் அ.சா1.–உடன் வீட்டிலிருந்தபோது, அ.சா.1–இன் அண்ணன் செல்வேந்திரனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் வந்தது. சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, ஆஜர் எதிரி சதீஸ் என்பவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனமும், செல்வேந்திரன் இருசக்கர வாகனம் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளாகி செல்வேந்திரன் காயம்பட்டு கீழே கிடந்தார். அவருக்கு தலை, கை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது. சிறிது நேரத்தில் 108 ஆம்புலன்ஸ் மூலம் தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். மருத்துவர்கள் அவரைப் பரிசோதித்துவிட்டு, செல்வேந்திரன் இறந்துவிட்டதாகக் கூறினார்கள். சம்பவம் குறித்துப் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

சம்பவம் பற்றி யார் எனக்குத் தகவல் சொன்னார்கள் என்றால், அண்ணாத்துரை என்பவர் அருணுக்கு தகவல் கூறினார். நான் சம்பவ இடத்திற்கு

செல்லும்போது, சுமார் 07.00 மணியிருக்கும். நான் சம்பவ இடத்திற்குச் செல்லும்போது, அந்த இடத்தில் சுமார் 10 அல்லது 15 ஆட்கள் இருந்தார்கள். நாங்கள் தேனி, க.கவிலக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். ஆம்புலன்சில் செல்வேந்திரனின் மனைவி மட்டும் சென்றார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை எத்தனை முறை, எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால், என்னை விசாரிக்கவில்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.13 20:32:39 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**